# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. முதலெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 12 ஆ) 18 இ) 30 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. வாடைக்காற்று வீசுவது

அ) கிழக்கிலிருந்து ஆ) மேற்கிலிருந்து
இ) வடக்கிலிருந்து ஈ) தெற்கிலிருந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இந்தியச்சிந்தனையும் அதன் வளர்ச்சியும் என்ற நூலை எழுதியவர்

அ) கார்டுவெல் ஆ) அல்பேர்ட்சுவைட்சர்
இ) வீரமாமுனிவர் ஈ) நெல்சன்மண்டேலா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. 1979 ஆம் ஆண்டு அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட இடம்

அ) கந்தரோடை ஆ) புத்தளம்
இ) ஆனைக்கோட்டை ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. **குறள்:-**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
________________ வைக்கப் படும்

அ) வீட்டுக்குள் ஆ) வையத்துள் இ) தெய்வத்துள் ஈ) வானத்துள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பின்வருவனவற்றுள் தெரிநிலை வினைமுற்று

அ) நல்லன் ஆ) சென்றான் இ) வேனிலான் ஈ) கரியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. அருமைபெருமை என்ற இணைமொழித்தொடர் விளக்குவது

அ) மிகக்கொஞ்சம் ஆ) ஏற்றஇறக்கம் இ) மிகச்சிறப்பு ஈ) நன்றும்தீதும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பௌத்தர் அல்லாதவரை மாந்தராக மதிக்கக்கூடாது. அவர்கள் விலங்குகளை விடக் கீழானவர் எனக் கூறும் நூல்

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) மகாவம்சம் ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பின்வருவனவற்றுள் பகுசொல்

அ) மண் ஆ) நிலம் இ) கவிஞன் ஈ) காடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. "உயிர் விட்டான் மடிமீது போய்விட்டான் எனை மட்டும் உயிரோடு விட்டுவிட்டு" என்ற அடி இடம்பெற்றுள்ள பாடத் தலைப்பு

அ) புதியதொரு வீடு ஆ) மீண்டும் தொடங்கும் மிடுக்கு

இ) தாயின் தாலாட்டு ஈ) புலவரும் வறுமையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பழம்படுபனையின் கிழங்கு பிளந்தது போன்ற அலகையுடைய பறவை

அ) நாரை ஆ) காகம் இ) குயில் ஈ) அன்னம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஆங்கிலேயர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று

அ) தேயிலை ஆ) மிளகு இ) கறுவா ஈ) ஏலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஓட்டப்போட்டியில் ஓடிக் களைத்த சிறுவன் தண்ணீரை ______________ என்று குடித்தான்.

அ) கடகட ஆ) மடமட இ) படபட ஈ) தடதட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. செய்வாள் என்ற சொல்லின் இடைநிலை

அ) அள் ஆ) செய் இ) வ் ஈ) ஆள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என ஏரணம் செய்த புலவர்

அ) தருமி ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) நக்கீரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. காலித்துறைமுகத்தை முதன்முதலில் வந்தடைந்த போர்த்துக்கேயன்

அ) அல்மெய்டா ஆ) வாசுகோடகாமா

இ) கென்றி வான்ற் ஈ) தோமசு மெயிற்லன்ட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) பென்னம்பெரிய ஆ) நடுநடுங்கி

இ) அழுதுஅழுது ஈ) ஏச்சுப்பேச்சு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பனை + அடி என்பதைச் சேர்த்தால்

அ) பனையடி ஆ) பனைவடி இ) பனைஅடி ஈ) பனைய்யடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தமிழ்மீது கொண்ட பற்றினால் தனது பெயரைத் தனிநாயகம் என மாற்றிக்கொண்டவர்

அ) வரதன் ஆ) மயில்வாகனன் இ) சேவியர் ஈ) தேவநேசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. "த்" என்ற வல்லின மெய்யின் இன எழுத்து

அ) ங் ஆ) ண் இ) ம் ஈ) ந்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சிந்துவெளிச் சிற்பங்களை ஒத்த சிற்பங்கள் வடபகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இடம்

அ) ஆனையிறவு ஆ) ஆனைவிழுந்தான் இ) கிளிநொச்சி ஈ) வவுனியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இனியா அழகான ஓவியம் வரைந்தாள். இதில் இடம்பெற்றுள்ள அடைமொழி

அ) ஓவியம் ஆ) இனியா இ) வரைந்தாள் ஈ) அழகான

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. **பழமொழி** :- நிறைகுடம் தளம்பாது என்பதன் பொருள்

அ) எல்லை கடத்தல் ஆ) வீண்பெருமை

இ) சிறிதின் பெருமை ஈ) அறிவின் அடக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நந்திக்கலம்பகம் பாடப்பட்ட மன்னன்

அ) நரசிம்மன் ஆ) குலோத்துங்கன்

இ) நந்திவர்மன் ஈ) மகேந்திரவர்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. 'தொல்லிலங்கையில் சிங்கள தமிழ் உறவுகள்' என்ற நூலை எழுதியவர்

அ) மகாநாமதேரர் ஆ) ஈ.டபிள்யூ அதிகாரம்

இ) ஏ.ஈ குணசிங்க ஈ) லயனல் சரத்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கி.மு ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கப் புலவர்

அ) சேக்ச்பியர் ஆ) சாவோ இ) வெர்சில் ஈ) கோமர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **தேன்போன்ற தமிழ்.** இதில் இடம்பெற்றுள்ள உவமேயம்

அ) தேன் ஆ) தமிழ் இ) இனிமை ஈ) போன்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. **கோ** என்பது

அ) புலவர் ஆ) மன்னன் இ) ஆசிரியர் ஈ) பெற்றோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. போர்த்துக்கேயர் உடன்படிக்கை செய்துகொண்ட கோட்டை அரசன்

அ) புவனேகபாகு ஆ) விசயபாகு இ) தர்மபாலா ஈ) மாயாதுன்னை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. நீங்கற் பொருளுக்குரிய வேற்றுமை

அ) 1ஆம் வேற்றுமை ஆ) 5ஆம் வேற்றுமை

இ) 6ஆம் வேற்றுமை ஈ) 2ஆம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தனித்தமிழ்க் குழுவில் முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர் பரிதிமாற்கலைஞர். இவர் மதுரை அருகே விளாச்சேரி என்னும் ஊரில் கோவிந்தசிவன் - லட்சுமிஅம்மாள் இணையருக்கு மகனாக 06.07.1870ல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சூரியநாராயணன். இவர் தமிழ் மீது கொண்ட பற்றினால் வடமொழி கலந்த தனது பெயரைத் தூயதமிழில் பரிதிமாற்கலைஞர் என மாற்றிக்கொண்டார். இவர் தமிழ்மொழியை மதுரை சபாபதி முதலியாரிடம் கற்றார். சிறு வயதிலேயே தமிழ்மொழி, இலக்கணம், இலக்கியம் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். அதனால் இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழ் மொழியில் மட்டுமன்றி நாடகத்திலும் புலமை மிக்கவராக விளங்கினார். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி வரலாறு என்ற ஆய்வு நூலையும் கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும் நாடக இலக்கணமான நாடகவியலையும் எழுதினார். இவர் எழுதிய பதின்மூன்று நூல்கள் தமிழக அரசினால் அரசுடமையாக்கப்பட்டது. வடமொழியற்ற தனித் தமிழ் வேண்டும் என்பதில் பெரு முனைப்புடன் வாழ்ந்தார். பரிதிமாற்கலைஞர் 02.11.1903ல் எமை விட்டுப்பிரிந்தார். தமிழ் உலகம் ஒரு தமிழ்ப் பற்றாளரை இழந்தது.

1. பரிதிமாற்கலைஞர் எழுதிய நூல்கள் யாரால் அரசுடமையாக்கப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

2. இவர் எவற்றில் வல்லவராகத் திகழ்ந்தார்?

_______________________________________________

_______________________________________________

3. தனித்தமிழ் வேண்டும் என்பதில் பெருமுனைப்புடன் வாழ்ந்தவர் யார்?

_______________________________________________

_______________________________________________

4. இவர் எழுதிய ஆய்வு நூல் எது?

_______________________________________________

_______________________________________________

5. பரிதிமாற்கலைஞர் யாரிடம் தமிழ் கற்றார்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. தனிநாயகம் அடிகளாரால் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்ட இடங்களின் பெயர்கள் இரண்டினைத் தருக.

2. ஐம்புலன்களும் எவை?

3. இலங்கையில் பழைய கற்காலத்தில் இருந்தே மக்கள் வாழ்கின்றனர் என்பதைக் காட்டும் சான்றுகள் இரண்டைத் தருக.

4. தமிழரின் ஆதிமரபினரான இயக்கரின் அரசும், நாகரின் அரசும் காணப்பட்ட இடங்கள் எவை?

5. குறள் :- ***அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு***

இக் குறளின் பொருளைத் தருக.

6. புதியதொரு வீடு என்ற நாடகத்தை எழுதியவர் யார்?அதில் கூறப்படும் தொழில் எது?

7. சங்கிலியனுக்கு உதவிக்கு வந்த தஞ்சைத் தளபதி யார்?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குக.**

# அவலம்

| உண்ணவும் | போக்கவும் | பசி | அறுவடை | சோற்றுக்கு |
|---|---|---|---|---|

உலகில் வாழும் மாந்தர்களுள் எத்தனை

உறவுகள் ______________ பட்டினியில்

விதைத்த நெல் முற்றும் விளையவில்லை

விளைந்தவற்றை ______________ செய்யவும் முடியவில்லை

ஒருபிடி ______________ வழியுமில்லை

ஒரு பொழுது உண்ணவும் உணவும் இல்லை

பஞ்சத்தைப் ______________ இயலவில்லை

பச்சிளங் குழந்தைகளும் தப்பவில்லை

உழைத்து ______________ வழியுமில்லை

உறவுகள் உதவவும் வரவில்லை

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் உருபுகள் எத்தனையாம் வேற்றுமைக்குரியன?

| உருபுகள் | வேற்றுமைகள் |
|---|---|
| கண் | |
| அது | |
| கு | |

2. வினா எழுத்துகள் எத்தனை? சொல்லின் முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகளைத் தருக.

________________________________________

________________________________________

3. தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ. நோய்நொடி :- ________________________________________

________________________________________

ஆ. பென்னம்பெரிய :- ________________________________________

________________________________________

4. இலக்கணவகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்?
பெயர்ச்சொல், உரிச்சொல் என்பவற்றிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத்தருக.

________________________________________

பெயர்ச்சொல் :- ________________________________________

உரிச்சொல் :- ________________________________________

5. **எழுந்தனன்** என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

________________________________________

________________________________________

| புள்ளிகள் 15 |
|---|

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Time is very Valuable for us. We do our work by time. A day hastwenty four hours. The day is divided into Early morning,morning, noon, afternoon, evening, night and mid night. The sun has an important role on changes of time.We have to do our jobs in particular times.

Le temps est très précieux pour nous. Nous réalisons nos tâches en temps et en heure. Une journée comporte 24 heures. Une journée se différencie en plusieurs phases telles que le lever de soleil, le matin, le midi, l'après-midi, le soir et la nuit. Le soleil porte un rôle important sur le changement d'horaire c'est pourquoi nous devons effectuer notre travail sur une tranche horaire.

Zeit ist für uns sehr wertvoll. Wir machen unsere Arbeit nach Zeit. Ein Tag hat 24 Stunden. Der Tag besteht aus Frühmorgen, Morgen, Mittag, Nachmittag, Abend, Nacht und Mitternacht. Die Sonne spielt eine wichtige Rolle für die Zeit. Wir müssen unsere Arbeiten in der vorgeschriebenen Zeit erledigen.

Tid er meget værd for os. Vi udfører vores arbejde efter tid. En dag har fireogtyve timer. Dagen er inddelt i; tidlig morgen, morgen, formiddag, eftermiddag, aften, nat og midnat. Solen spiller en vigtig rolle i tidsskift. Vi er nødt til at udføre vores arbejde på bestemte tider.

Tijd is zeer waardevol voor ons. Wij doen ons werk door de tijd. Een dag heeft vierentwintig uur. De dag is opgedeeld in de vroege ochtend, 's ochtends,' s middags, ' s avonds, 's nachts en middernacht. De zon heeft een belangrijke rol op de veranderingen van de tijd. We moeten ons werk doen in bepaalde tijden.

Per noi il tempo è molto prezioso. Noi svolgiamo/facciamo i nostri lavori in modo puntuale. In un giorno ci sono 24 ore. Un giorno è diviso in alba, mattino, mezzogiorno, pomeriggio, tramonto, sera, notte. Il sole ha un ruolo importante nel cambiamento del tempo/ora. Per esempio noi dobbiamo fare i nostri lavori in particolari/precisi tempi/momenti.

Tid er veldig verdifull for oss. Vi gjør arbeidet vårt etter tid. En dag har tjuefire timer. Dagen er inndelt i tidlig morgen, morgen, midt på dagen, ettermiddag, kveld, natt og midnatt. Sola spiller en viktig rolle i endring av tid. Vi må gjøre våre jobber til bestemte tider.

Tid är väldigt värdefullt för oss. Vi gör vårt jobb efter tiden. Ett dygn har 24 dagar. Ett dygn kan bli delat i gryning, morgon, middag, eftermiddag, kväll, natt och midnatt. Solen har en viktig roll i byte av tid. Vi måste göra vårt arbete inom givna tider. Till exempel,

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தனிநாயகம் அடிகளார்
- தமிழ்க்கல்வியும் தமிழ்ப்பள்ளியும்
- போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு

புள்ளிகள் 20